10 JAN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டம்

---

*(1995, ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

*1995, ஒக்ரோபர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.*

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 45

தபாற் செலவு : ரூபா 2.00

## 1995 ஆம் ஆண்டின் 21 இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் (திருத்தம்)

[1995, ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ. 04/95

**1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டத்தின் விரிவுப்பெயர் "கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தைத் தாபித்தல்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

*"கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டம்" அத்துடன் "கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்" என்பன "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டம்" அத்துடன் "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்" என முன்னமே அறியப்படுதல்.*

3. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் ஏதேனும் வேறு எழுத்திலான சட்டத்திலும் —

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தில் "கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டம்" என்னும் சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டம்" என்னும் சொற்களும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தில் எங்கெல்லாம் "கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்" என்னும் சொற்கள் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்" என்னும் சொற்களும்,

இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில் அல்லது வேறு ஆவணத்தில் "கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகச் சட்டம்" அத்துடன் "கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகம்" என்பவற்றிற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்குப் பின்னர் முறையே "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டம்" அத்துடன் "ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யுமாறு வாசிக்கப்பட்டுப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

*நிலைபெயர் கால ஏற்பாடுகள்.*

4. (1) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளில் உள்ளதான அல்லது பயனுறுகின்றதான கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் வேறு சாதனங்களும், கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்திற்குப் பதிலாக, ஹெக்டர்

கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம் அதற்கு ஒரு திறத்தவ ராக இருந்தாற்போன்று முற்றாகவும் பயனுறுவகையிலும், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்திற்கு எதிராக அல்லது அதன் சார்பில் பயனுறுதல் வேண்டும்.

(2) கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் அல்லது அதற்கு எதி ராகத் தொடுக்கப்பட்டனவும், இச்சட்டம் ஆரம்பமாகும் திகதிக்கு நேர் முந்திய திகதியில் முடிவுறாதிருக்கின்றனவுமான எல்லா தொடர்ச்சிகளும் வழக்குகளும் மேன்முறையீடுகளும் அத்துடன் வேறு சட்ட நடவடிக்கை களும் நீக்கப்படவோ இடைநிறுத்தப்படவோ கூடாது. அத்துடன் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தினால் அல்லது அதற்கெதிராக தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது வலுவுக் கிடப்படலாம்.

(3) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமைகள், பொறுப்புகள் அத்து டன் கடப்பாடுகள் தவிர்ந்த, கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் எல்லா உரிமைகளும், பொறுப்புகளும், கடப்பாடுகளும் ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் உரிமைகள், பொறுப்புகள் அத்துடன் கடப்பாடுகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

5. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,840' ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.